# அரசியல் அரங்காளர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை

**தமிழில் அரசியல் நாடகங்களை ஆரம்பித்து வைத்தவர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை:**
இலண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று (1936) இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகி, தமிழ்த்துறைத் தலைவராகி – பல்கலைக்கழகக்கல்லூரி பல்கலைக்கழகமாகியபின் (1942) தமிழ்த் துறைப் பேராசிரியராக சுவாமி விபுலானந்தர் பதவியேற்றதன் பின்பும் தமிழ்துறைத் தலைவராகவே சுவாமிகளுடன் இணைந்திருந்து 1947ல் பேராசிரியராகி ஒரு 30 ஆண்டு காலம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய ஒரு பல்கலைக்கழக அறிவுஜீவி, வரலாற்று ஆராய்ச்சியாளர் பேராசிரியர் கந்தசாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்களின் பெயரும் பிரபல்யமும், முக்கியத்துவமும் அவர் ஒரு நாடகாசிரியர் என்ற வகையிலேயே பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது என்பது எத்தனை வியப்பானது.

'இருபத்தியொன்பது வருடகாலம் தமிழ்த்துறையின் புலமை நிர்வாகப் போக்கினை நிர்ணயித்த ஒரு பிரதான சக்தி பேராசிரியர் கணபதிப்பிள்ளை' என்று பதிவு செய்கின்றார் அமரர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்.

இவர் விரிவுரையாளராக நியமனம் பெற்ற 1936 லிருந்தே பல்கலைக்கழக ஆண்டு விழா மேடை ஏற்றத்துக்காக நாடகம் எழுதத் தொடங்கினார்.

1936இல் 'கண்ணன் கூத்து', 1941இல் 'நாட்டவன் நகர வாழ்க்கை', 1948இல் 'பொருளோ பொருள்', 1950இல் 'முருகன் திருகுதாளம்', 1951இல் 'சங்கிலி'.

இந்த நாடகங்கள் கொழும்பு வளாக மேடைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பல்கலைக்கழக மாணவர் மாணவியரால் நடிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டவை.

யாழ்ப்பாண நிலபிரபுத்துவ கலாசாரத்தினதும் ஏகாதிபத்தியவாதிகளின் வாரிசுகளாகச் செயற்படும் ஆங்கிலமோக ஆதிக்கத்தையும், முக்கியத்துவத்தையும் முறியடிக்க நாடகக்கலையைப் பயன்படுத்தியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள்.

இந்தப் பயன்பாட்டுக்கு உகந்ததாகவும் பொருத்தமானதாகவும் நாடக வழிமுறைகள் மாற்றம் பெற வேண்டியது அவசியமாயிற்று.

ஏற்கனவே இருந்துவந்த மரபு வழியான புராண, இதிகாச, நாடக வகைகளைக் கைவிட்டு புதிய சமூக நாடகங்கள் தோற்றம் பெற வேண்டியது அவசியத் தேவையாயிற்று. இந்தத் தேவையை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் ஈழத்தில் ஆரம்பித்து வைத்தவர் என்கின்ற பெருமை பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களுடையது.

யாழ்ப்பாண வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் நாடகங்கள் இவருடையவை என்றும், யாழ்ப்பாண பேச்சுவழக்கை மிக அற்புதமாகப் பதிவு செய்பவை இவருடைய அரங்க உரையாடல்கள் என்றும் இவை போற்றப்பட்டாலும் யாழ்ப்பாணச் சமூக வாழ்வில் பண வசதியுடனும் செல்வாக்குடனும் வாழ்பவர்கள் பற்றிய கண்டன விமர்சனங்களாகவே இவருடைய நாடகங்கள் அமைந்திருந்தன.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் என்றதும் மனதில் வந்து முதலில் நிற்பது உடையார் மிடுக்கு.

'1952ல் கொழும்பிலிருந்து தமிழ் போதனா பீடம் பேராதனைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டது. இம்மாற்றத்தால் ஏற்பட்ட இடர்கள் சிக்கல்களினால் அந்த ஆண்டு பல்கலைக்கழகத்தின் அரங்கு ஸ்தம்பித நிலையில் இருந்தது' என்று எழுதுகின்றார் இ. சிவானந்தன் அவர்கள். *(பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் - நூல்)*

இருப்பினும், 1953ல் 'உடையார் மிடுக்கு' ஒரு வெற்றியுடன் கண்டி திருத்துவக் கல்லூரியில் மேடையேறியது. இந்த முதல் மேடை ஏற்றத்தில் (1953) அமரர்களான பேராசிரியர் கா. சிவத்தம்பி உடையாராகவும், பேராசிரியர் கைலாசபதி உடையாரின் மகனாகவும், திருப்புகழ்பாடுபவராக தினகரன் பிரதம ஆசிரியரும் வழக்கறிஞருமான ஆர். சிவகுருநாதனும் நடித்தனர் என்பது குறிப்பிடக்கூடியதே.

உடையார் மிடுக்கு என்னும் நாடகத்தின் பெயரே அது கூறப்போகின்ற கருத்துகளுக்குக் கட்டியம் கூறுவதாகவே அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அந்த நாட்களில் உடையார் பதவியினால் கிடைத்த அந்தஸ்தும் அதன் மூலம் உடையார்கள் மற்றவர்களை மதிக்காமல், தலைக்கனம் கொண்டு நடப்பதையும் தொழிலாளர்களை அவமதித்து அவர்களை



ஒடுக்கியும் அடிக்கவும் செய்து அடக்கி வைப்பதையும், அவர்களுடைய நடை உடை பாவனைகளையும் நாடகப் பாத்திரங்கள் உரையாடல்கள் மூலம் வெளிக் கொண்டு வந்த நாடகம் இது.

பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் இந்த நாடகம் பெரும் வரவேற்புடன் அரங்கேறியது. நாடகக் குழு வைத்து இயங்கியவர்கள் இந்த நாடகப்பிரதியை விருப்பத்துடன் கேட்டுப் பெற்று மேடையேற்றியுள்ளனர்.

கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகக்குழுவும் 'உடையார் மிடுக்கை' மேடை ஏற்றி இருக்கிறது.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலும் பேராசிரியரின் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

அமைதியும் எளிமையும் நிறைந்த யாழ்ப்பாணத்து வாழ்வையும், அதேவேளை யாழ்ப்பாண உயர்மட்ட வாழ்வின் அடாவடித்தனங்களையும் இவரது நாடகங்கள் சித்தரித்தன.

அரசியல் 'பிரச்சினைகள் பின்னிப் பிணைந்து வளர்ந்து யாழ்ப்பாணத்தின் அமைதி குலைவதற்கு முன்பான காலப்பகுதியில் (1930 - 1960) யாழ்ப்பாண வாழ்வின் பிரதான பிரச்சினையாகவிருந்தது குடும்பங்களின் மேனிலைவாதமே! நீ பெரிதா நான் பெரிதா என்னும் குடும்பப் போட்டிகள். இந்தக் குடும்ப மேனிலைப்பாட்டுடன் சம்பந்தப்படும் ஒரு முக்கிய மானதும், அநாகரீகமானதுமான விஷயம் சீதனம். இன்னொன்று ஆங்கில மோஸ்தர் வாழ்க்கை முறை. கொஞ்சம் ஆங்கிலம் கற்றதும், தமிழ் தெரியாதது போன்ற நடிப்பும், போலியான வாழ்க்கையும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சமூக நாடகங்கள் அனைத்துமே இப்போலி வாழ்க்கைக்கான கிண்டல் நிறைந்த கண்டங்களாகவே அமைந்திருந்தன.

சமூகத்தில் மேல் நிலையில் உள்ளவர்களின் போலி முகங்களை வெளிக்கொண்டு வந்ததற்கான விலையை பேராசிரியர் கணபதிப்பிள்ளை கொடுக்க வேண்டியே இருந்தது என்பது எத்தனை சோகமானது.

இவருடைய நாடகங்கள் பெரிய மனிதர்களைக் காயப்படுத்தின. கோபமும் படுத்தின.

1936ல் இருந்து பல்கலைக்கழகக் கல்லூரியின் தமிழ்துறைத்தலைவராக இருந்த இவர், 1942ல் பல்கலைக்கழகக் கல்லூரி பல்கலைக்கழகமாகியதும் பேராசிரியர் பதவிக்காக தெரிவு செய்யப்படவில்லை. மாறாக சுவாமி விபுலானந்தருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்தர் பேராசிரியராகவும் தொடர்ந்து கணபதிப்பிள்ளையே துறைத் தலைவராகவும் இருந்தனர். சுவாமிகளின் மறைவுக்குப் பின்பும் (1947) இவரது பேராசிரியர் தெரிவை பலர் விரும்பவில்லை. சிலர் தயக்கத்துடன் இருந்தனர். சு.நடேசபிள்ளையை அழைக்க வேண்டும் என்ற குரல் எழும்பியது.

'நடேசபிள்ளையே இதனை மறுத்தார் என்றும், 1947ல் க. கணபதிப்பிள்ளை பேராசிரியராக நியமிக்கப்பட்டார்' என்றும் பதிவு செய்துள்ளார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள்.

சமூகச் செல்வாக்குள்ள மேல் மட்டத்தினருக்கு அவரைப் பிடிக்கவில்லை என்பது தொடர்ந்து கொண்டே இருந்தது.

1946ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஈழத் தமிழ்ப்புலவர் மன்ற தமிழ் விழா பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு அழைப்பிதழ் கூட அனுப்பாமல் புறக்கணித்திருக்கிறது என்றெழுதுகின்றார் தமிழறிஞர் க.சொக்கலிங்கம் (சொக்கன்). *(மாருதம் இதழ் 4 ஐப்பசி 2003)*

1951ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடந்த தமிழ் விழாவுக்கு ஒரு பேராளராகவோ பேச்சாளராகவோ இவர் அழைக்கப்படவில்லை. அழைப்பிதழ்கூட அனுப்பப்படவில்லை.

'இந்தப் புறக்கணிப்பு அந்த நாளைய ஒரு முக்கிய பிரச்சினையாக வெடித்தது.

தினகரனும் இதைக் கண்டித்திருந்தது. என்றும் குறிக்கின்றார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள். *(ஈழத்தின் தமிழ் இலக்கியச் சுடர்கள் - குமரன் வெளியீடு)*

கணபதிப்பிள்ளை அவர்கள் பருத்தித்துறை தும்பளை என்னும் கிராமத்தில் 2-7-1903ல் பிறந்தவர். தகப்பனார் கந்தசாமிப்பிள்ளை ஒரு பாரம்பரிய மருத்துவர். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் ஆங்கிலவழிக் கல்வியைக் கற்கத் தொடங்கினார். பல்கலைக் கழகக் கல்விக்காக இலங்கை பல்கலைக் கழகக் கல்லூரியில் சேர்ந்தார் (1927) கலைமாணி பட்டத்தை முதல் வகுப்புச் சித்தியுடன் அடைந்து புலமைபரிசில் பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பயின்று வித்வான் மற்றும் கலாநிதிப்பட்டங்களுடன் 1936ல் நாடு திரும்பினார்.

ஒரு ஆய்வாளரான, செய்யுள், சிறுவர் இலக்கியம் நாவல் போன்ற ஆக்க இலக்கியத் துறைகளிலும் ஈடுபாட்டுடன் உழைத்தவரான இவர் ஒரு நாடகாசிரியராகவே புகழ் பெற்றவராவார்.

இவருடைய நாடகங்களை சமூக, அரசியல் மற்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் என வகுத்துக் கொள்ளலாம்.

'உடையார் மிடுக்கு', 'நாட்டவன் நகர வாழ்க்கை', 'முருகன் திருகுதாளம்', 'கண்ணன் கூத்து', 'பொருளோ பொருள்', 'சுந்தரம் எங்கே' ஆகிய ஆறு நாடகங்களும் யாழ்ப்பாணத்து வாழ்வியலைப் பேசுகின்ற சமூக நாடகங்கள்.

முதல் நான்கு நாடகங்களும் நானாடகம் என்று ஒரு தொகுதியாகவும் 'பொருளோ பொருள்' நாடகத்துடன் 'தவறான எண்ணம்' என்னும் அரசியல் நாடகமும் இணைந்ததாக 'இரு நாடகம்' என்னும் தொகுதியாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

## ஆழித்து முத்துக்கள் 103

ஆறாவது நாடகமான சுந்தரம் எங்கே நூலாகவில்லை.

அரசியல் நாடகங்களாக கொள்ளப்பட வேண்டியவை 'சங்கிலி' (1952), 'தவறான எண்ணம்' (1954), 'துரோகிகள்' (1956) ஆகிய மூன்று நாடகங்கள்.

'சங்கிலி' நாடகம் ஒரு தனி நூலாக வெளியிடப்பட்டு இரண்டு பதிப்புகள் கண்டிருக்கிறது.

இது ஒரு வரலாற்று நாடகம்போல் தோற்றம் காட்டினாலும் அரசியல் உள்ளுரையை வன்

**- தெளிவத்தை ஜோசப் -**

மையாகக் கொண்டிருக்கின்றது என்கின்றார் அமரர் சிவத்தம்பி அவர்கள்.

துரோகிகள் 1956ல் மேடையேறிய நாடகம். 1956ன் இனச் சங்காரத்தின் வரலாற்றை ஒரு தனித்துவ முத்திரையுடன் கொண்டு வந்த நாடகம் இது.

நல் மனதுடன் வாழ விரும்பும் ஒரு சமூகத்தின் உண்மையான துரோகிகள் யார் என்பதற்கான விடையுடன் ஒரு தமிழர் எழுச்சிக்கும் வித்திட்ட நாடகம் இது என ஏடுகள் விமர்சனம் கூறின.


தமிழினத்தின் மத்தியில் சுயநல நாட்டம் கொண்ட அரசியல் துரோகிகளினாலேதான் தமிழ் மக்களுக்குப் பரிதாபகரமான நிலைமை உருவாகிறது என்ற கருத்தை நாடகம் முன்வைப்பதுடன் "காலத்துக்குக்காலம் எமக்குத் தலைவர்களாய் வந்தோர் தங்கள் நன்மைகளுக்காக எம்மக்களை மாற்றனுக்கு விற்று இரண்டகம் செய்துவிட்டார்கள்" என்றும் "எதற்கும் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றும் வரும் நாடக உரையாடல்கள் மூலமும் பெரும் வரவேற்பு பெற்ற நாடகம் இது.

யாழ் மாநகரசபை மண்டபத்தில் இரண்டு தடவைகளும் கொழும்பு லயனல் வெண்ற் அரங்கில் இரண்டு தடவைகளும் கண்டியிலும் மட்டக்களப்பிலும் ஒரு தடவையும் மேடையேறிய நாடகம் இது.

'தவறான எண்ணம்' ஒரு கற்பனையான நாட்டில் நடப்பதாகக் காட்டப்பட்டாலும் சுதந்திரத்துக்குப் பிறகான தமிழ் மக்களின் பிரச்சினைகளே படிப்படியாகக் காட்டப்படுகின்றன. இலங்கையில் மேற்கிளம்பிய தமிழ் மக்களின் அரசியற் பிரச்சினைகளை நாடகங்கள் வாயிலாக ஒரு துணிவுடன் கூற முன் வந்ததன் மூலம் ஈழத்து அரசியல் நாடகத்தின் ஆரம்பம் பேராசிரியர் கணபதிப்பிள்ளையுடனேயே தொடக்கம் கொள்கின்றது என்பது ஏற்புடையதே.

இவருடைய 'மாணிக்கமாலை' வடமொழியிலிருந்து அதன் இலக்கியச் சுவைக்காகவே மொழி பெயர்க்கப்பட்ட நாடகம். நூலுருவில் 1950லும் 1953லுமாக இரண்டு பதிப்புப் பெற்றுள்ளது.

இந்த 10 நாடகங்களின் மூலம் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாய்த் திகழ்பவர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள்.



theliwathai.joseph@thaiveedu.com